[2010 நவம்பர் 12

(ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2010), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படாத காரணத்தினால், இன்று தனி அதிகாரிகள் சில முடிவுகளை எடுக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கக்கூடிய நிகழ்வுகள் தொடக்க வேளாண்மை வங்கிகளிலும் சரி, மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய பணியாளர்கள், உபரியாக இருக்கிறார்கள். சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சம்பளம்கூடக் கொடுக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே தமிழகத்திலே சுமார் 450 பேர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இருந்து மத்திய கூட்டுறவு வங்கியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அப்படியே absorb செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தும்கூட அவர்களை எடுக்க முடியாமல் இன்று தேர்தல்

@ 10—11—2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2010 நவம்பர் 12] [திரு. சி. ஞானசேகரன்]

நடக்காத காரணத்தாலே தனி அலுவலர்கள் யாரும் அவர்களை எடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, இது குறித்து நேற்று முன்தினம்கூட நான் மாண்புமிகு துணை முதலமைச்சரிடம் ஒரு மனுவைக் கொடுத்து தொடக்க வேளாண்மை வங்கிகளில் பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள் 450 பேரை மத்திய கூட்டுறவு வங்கியில் அப்படியே நிரந்தரம் செய்வதற்கான ஒரு ஆணையை பிறப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன். ஆக உரிய காலத்தில் தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய L.D. Bank ஊழியர்கள், அதேபோல் தொடக்க வேளாண்மை வங்கியில் பணியாற்றும் பணியாளர்கள், இவர்கள் எல்லாம் அயற்பணியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களை அப்படியே பணியில் நிரந்தரப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். விரைந்து தேர்தல் நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தாத காரணத்தால் கூட்டு உறவு என்பது நல்லதற்கு அல்லாமல் தவறான செயல்களுக்கு ஏற்பட்டு அந்த நிறுவனங்களே மிகவும் தொல்லைக்குள்ளாகி மக்கள் மேலும் அவதிக்குள்ளாகிற நிலைமை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இவற்றுக்கு விடை காண விரைவில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் ஒரே நோக்கம். சட்டப் பிரச்சினை இடையிலே குறுக்கிட்டு புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதற்கும் தடை இருக்கிறது, புதிய உறுப்பினர்கள் சேர்க்காமல் தேர்தல் நடத்துவதற்கும் தடை இருக்கிறது.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2010 நவம்பர் 12

அப்படி ஒரு நிலை இருக்கிற காரணமாக இப்போது தேர்தல் நடத்தப்படவில்லையே தவிர எவ்வளவு விரைவில் நடத்தமுடியுமோ நடத்துவதிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு அக்கறை உண்டு; ஆர்வம் உண்டு. இன்னும் சொல்லப்போனால் அரசியலுக்கே இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது அரசினுடைய ஆசை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.ம. வேலுசாமி, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்லப் போகிறீர்களா, வேண்டாம் என்று சொல்லப் போகிறீர்களா?

***திரு. செ.ம. வேலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 2007-ல் தேர்தல் நடைபெற்று இரத்து செய்ததற்குப் பின்னர், முறையாகத் தேர்தல் நடைபெறவில்லை என்றும், அரசியல் கட்சிகளை ஆய்ந்து இந்தத் தேர்தலை நடத்துவோம் என்றும் கூறி 6 மாதத்திற்கு ஒரு முறை இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுகிறது. ஆனால் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் தேர்தல் நிற்கிறது என்று தவறுதலாக அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைத்தான் நான் சுட்டிக் காண்பித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு முடிந்தால்தான் தேர்தலே நடத்த முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

2010 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS